பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி-சென்னை - 4
30 12 2025 **TUESDAY** 7 15 **AM**
ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- சமூக மத நல்லிணக்கத்துடன், சமுதாயத்தின் வளர்ச்சிக்காக மக்கள் ஒன்றிணைய வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கேட்டுக் கொண்டுள்ளார்.
- பிரதமர் திரு. நரேந்திர மோடி, முன்னணி பொருளாதார நிபுணர்களுடன் இன்று புதுதில்லியில் ஆலோசனை மேற்கொள்கிறார்.
- நடப்பு ரபி பருவத்தில் நாடுமுழுவதும் 614 லட்சம் ஹெக்டேர் பரப்பளவிற்கு, பயிர்கள் விதைக்கப்பட்டுள்ளதாக மத்திய வேளாண் அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- அமைதி திட்டத்தின் கீழ், யுக்ரைனுக்கு 15 ஆண்டுகள் பாதுகாப்பு உத்தரவாதத்தை அளிக்க அமெரிக்கா முன்வந்துள்ளதாக யுக்ரைன் அதிபர் திரு. Vlodymyr Zelenskyy கூறியுள்ளார்.
- இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையேயான 5வது மற்றும் இறுதி மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி இன்று திருவனந்தபுரத்தில் நடைபெறுகிறது.

>>>>>><<<<<<

சமூக மத நல்லிணக்கத்துடன், சமுதாயத்தின் வளர்ச்சிக்காக மக்கள் ஒன்றிணைய வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கேட்டுக் கொண்டுள்ளார்.

திருவனந்தபுரத்தில் நேற்று நடைபெற்ற கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு கொண்டாட்ட நிகழ்ச்சியில் பங்கேற்று பெசிய அவர், பண்டிகைகளை மக்கள் ஒன்றிணைந்து கொண்டாடும் போது, ஜனநாயகம், சமூக நல்லிணக்கம் மற்றும் வளர்ச்சியின் உண்மையாக உத்வேகத்தை காண முடியும் என்று குறிப்பிட்டார்.

இன்று காலை, வர்கலாவில் நடைபெறும் சிவகிரி யாத்திரை நிகழ்ச்சியில் பங்கேற்கிறார்.

அதனைத் தொடர்ந்து, திருவனந்தபுரத்தில் உள்ள Mar Ivanios கல்லூரியின் ஆண்டு விழாவில் கலந்து கொள்கிறார்.

இன்று மாலை, தமிழகம் வரும் குடியரசு துணைத்தலைவர், ராமேஸ்வரத்தில் நடைபெறவுள்ள காசி தமிழ்ச் சங்கமம் நிறைவு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகிறார்.

இதில் மத்திய அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான், மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் உள்ளிட்டோர் கலந்து பங்கேற்கின்றனர்.

>>>>>><<<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி, முன்னணி பொருளாதார நிபுணர்களுடன் இன்று ஆலோசனை மேற்கொள்கிறார்.

புதுதில்லியில் உள்ள நித்தி ஆயோக் அலுவலகத்தில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில், மத்திய அரசின் முக்கிய பொருளாதார முடிவுகள் தொடர்பாக அவர் விவாதிக்கவுள்ளார்.

இந்த உரையாடலில் மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் மற்றும் அதிகாரிகள் பங்கேற்கவுள்ளனர்.

நாட்டின் தற்போதைய பொருளாதார சூழல் மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்து நிபுணர்கள் தங்கள் கருத்துகளை தெரிவிப்பதற்கு இது வாய்ப்பாக அமைந்துள்ளது.

அத்துடன், மத்திய பட்ஜெட் குறித்த பொருளாதார நிபுணர்களின் கருக்களையும் திரு. நரேந்திர மோடி கேட்டறிவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கூட்டத்தில் பெறப்படும் கருத்துக்கள், அடுத்த கட்ட பொருளாதார திட்டமிடலுக்கு பயனளிக்கும் என்று கூறப்படுகிறது.

>>>>>><<<<<<

நடப்பு ரபி பருவத்தில் நாடுமுழுவதும் 614 லட்சம் ஹெக்டேர் பரப்பளவிற்கு, பயிர்கள் விதைக்கப்பட்டுள்ளதாக மத்திய வேளாண் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதில், 133 லட்சம் ஹெக்டேர் பரப்பளவிற்கு பருப்பு வகைகளும், 49 லட்சம் ஹெக்டேர் அளவிற்கு சிறுதானியங்களும் விதைக்கப்பட்டுள்ளது.

எண்ணெய் வித்துக்கள் 94 லட்சம் ஹெக்டேர் பரப்பளவிற்கு விதைக்கப்பட்டுள்ளதாகவும் மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

நாட்டின் தொழில்துறை உற்பத்தி கடந்த நவம்பர் மாதத்தில் 6 புள்ளி ஏழு சதவீதமாக அதிகரித்துள்ளது.

இதுகுறித்து மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமைலாக்க அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், தொழில்துறை உற்பத்தி வளர்ச்சி கடந்த 25 மாதங்களில் இது அதிகம் என்று கூறப்பட்டுள்ளது.

உற்பத்தி துறையில் 8 சதவீத வளர்ச்சி காணப்பட்டுள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுரங்கத் தொழில் ஐந்து புள்ளி நான்கு சதவீத வளர்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமைலாக்க அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

மத்திய அரசின் வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார இயக்கம் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

இந்த இயக்கத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ள வேலைநாட்கள் அதிகரிப்பு தங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று தமிழகத்தின் தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த பயனாளிகள், எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் - பயனாளிகள் 49 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

இந்தியா - இலங்கை மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக கூட்டு பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய மீன்வளத்துறை இணையமைச்சர் திரு. எஸ்.பி. சிங் பாகல் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில், ராமேஸ்வரம் பாம்பனில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இலங்கை சிறையில் உள்ள 10 இந்திய மீனவர்களின் பிரச்சினைக்கு தீர்வு காண, மீன்வளத்துறை, வெளியுறவு அமைச்சகம், உள்துறை அமைச்சகம், கடற்படை, மாநில அரசு ஆகியவை இணைந்து நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்தார்.

முன்னதாக, பாம்பன் தெற்குவாடி பகுதியில், இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்ட மீனவர்களின் குடும்பத்தினரை சந்தித்த அமைச்சர், அவர்களின் குறைகளை கேட்டறிந்தார்.

அப்போது மீன்வளத்துறையின் சார்பில் செயல்படுத்தப்படும் மீனவர்களுக்கான நலத்திட்ட உதவிகள் குறித்தும் திரு. எஸ்.பி. சிங் பாகல் அவர்களிடம் எடுத்துரைத்தார்.

>>>>>><<<<<<

புத்தாண்டு கொண்டாட்டத்தை ஒட்டி, ஜம்மு கஷ்மீரில் பாதுகாப்பு படையினர் தீவிர சோதனையில் ஈடுபட்டுள்ளனர்.

நிகழ்ச்சி நடைபெறும் இடங்கள் மற்றும் முக்கிய பகுதிகளை அவர்கள் உன்னிப்பாக கண்காணித்து வருகின்றனர்.

ஜம்மு கஷ்மீருக்கு செல்லும் நுழைவாயிலில் கூடுதல் கண்காணிப்புச் சாவடிகள் அமைக்கப்பட்டு, வாகனங்கள் சோதனையிடப்படுகின்றன.

இதற்கிடையே, எல்லைப்புற மாவட்டங்களில் சந்தேகத்திற்கு இடமான சில பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாக உளவுத்துறை தெரிவித்துள்ளது.

பூஞ்ச் மாவட்டத்தின் Gohled கிராமத்தில் ட்ரோன் ஒன்று மீட்கப்பட்டதாக கூறப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

அமைதி திட்டத்தின் கீழ், யுக்ரைனுக்கு 15 ஆண்டுகள் பாதுகாப்பு உத்தரவாதத்தை அளிக்க அமெரிக்கா முன்வந்துள்ளதாக யுக்ரைன் அதிபர் திரு. Valodymyr Zelenskyy தெரிவித்துள்ளார்.

ஃப்ளோரிடாவில் அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப்-ஐ சந்தித்த பின் அவர் இதனை தெரிவித்தார்.

இந்த பாதுகாப்பு உத்தரவாதத்திற்கு அமெரிக்க நாடாளுமன்ற ஒப்புதல் அளிக்க வேண்டும் என்று யுக்ரைன் அதிபர் கூறினார்.

யுக்ரைன் நாட்டிற்கான பாதுகாப்பு உத்தரவாதம், 50 ஆண்டுகளாக இருக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

குறைந்தபட்சம் 60 நாட்கள் போர் நிறுத்தம் தேவைப்படுவதாகவும் அவர் கூறினார்.

Donbas பிராந்தியத்தில் தடையற்ற பொருளாதார மண்டலத்தை ஏற்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டதாக திரு. Valodymyr Zelenskyy தெரிவித்தார்.

இதற்கிடையே, அமைதி பேச்சுவார்த்தை ஒரு வாரத்திற்குள் நிறைவடைந்து, ரஷ்யா – யுக்ரைன் இடையேயான போர் முடிவுக்கு வரும் என்று அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<<

இந்தோனேஷியாவின் Sulawesi தீவில் உள்ள Manado நகரில் நிகழ்ந்த தீ விபத்தில் 16 பேர் உயிரிழந்தனர்.

முதியோர் இல்லத்தில் நிகழ்ந்த இந்த தீ விபத்தில், காயமடைந்த 15 பேர், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மின்கசிவு காரணமாக இந்த தீ விபத்து நிகழ்ந்ததாக அந்நாட்டு காவல்துறையின் முதற்கட்ட அறிக்கை தெரிவிக்கிறது.

இதுகுறித்த விசாரணை நடைபெற்று வருவதாகவும் கூறப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

பங்களாதேஷ் தேசிய கட்சித் தலைவரும், முன்னாள் பிரதமருமான கலிதா ஜியா காலமானார். அவருக்கு வயது 80

உடல்நலக்குறைவு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

>>>>>><<<<<<

ஹரியானா, சண்டிகர், உத்தரபிரதேசத்தின் மேற்குப்பகுதி மற்றும் பஞ்சாபில் இன்றும் நாளையும் மிக அதிகமான பனிப்பொழிவு காணப்படும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஜம்மு கஷ்மீர், லடாக், முஷஃபர்பாத் மற்றும் மத்திய பிரதேசத்தில் இன்று பனிப்பொழிவு காணப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

தில்லி, ஜார்கண்ட் மற்றும் அருணாச்சலப் பிரதேசத்தில் நாளை வரை பனிப்பொழிவு நிலவக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, தலைநகர் தில்லியில் காற்றின் தரம் மிக மோசமாக பதிவாகியுள்ளது.

இன்று காலை 6 மணி நிலவரப்படி, அங்கு காற்றின் தரக் குறியீடு 384-ஆக பதிவானது என்று மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையேயான 5வது மற்றும் இறுதி மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

திருவனந்தபுரத்தில் இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

ஐந்து போட்டிகளைக் கொண்ட இத்தொடரில் இந்தியா, முதல் நான்கு போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளது.

>>>>>><<<<<<

தோஹாவில் நடைபெற்று வரும் உலக Blitz செஸ் சாம்பியன் போட்டியில், இந்தியாவின் அர்ஜுன் எரிகைஸி, 13 சுற்றுகள் முடிவில் 10 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார்.

>>>>>>END<<<<<<